**கிளிநொச்சி மாவட்டத்தின் பத்து கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் - 2024**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** கிளிநொச்சி மாவட்டத்தின் கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் 10 இன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2024 ஆம் ஆண்டிற்கான கிளிநொச்சி மாவட்டத்தின் 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களுக்கும் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டதுடன், அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை மற்றும் பொது கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **அ.** | 7 நிறைவேற்று குழுக்களிலும் 1981 ஒக்டோபர் 16 ஆம் திகதிய 107 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்களின் பெறுமானத்தேய்வுகள் கணிப்பிடப்படாது சுற்றறிக்கைக்கு மாறாக வெவ்வேறு முறைகள் மற்றும் வெவ்வேறு பெறுமானத்தேய்வு வீதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. | பொருத்தமான சுற்று நிருபங்கள் பின்பற்றி பெறுமானத்தேய்வு கணிக்கப்படாததுடன் கணிக்கப்பட்டது. இனி வரும் காலங்களில் உரிய சுற்று நிருபங்களை பின்பற்றி கணீப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் காட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றுநிருபத்தின் பிரகாரம் பெறுமானத் தேய்வுகள் கணிக்கப்படுவதுடன் நிதிகூற்றுக்களும் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். |
| **ஆ.** | 5 நிறைவேற்று குழுக்களிலும் மீளாய்வாண்டு நிதிக்கூற்றில் ஏக்கர் வரி வருமானத்தை கணக்கு வைக்கும் போது அட்டுறு அடிப்படை பின்பற்றப்படாது அதற்கு மாறாக காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் ஏக்கர் வரி வருமானத்தை கணக்கு வைக்கும் போது அட்டுறு அடிப்படையில் கணக்கு வைப்பதாக குறிப்பிட்டிருந்தும் அதற்கு மாறாக காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | ஏக்கர் வரி உட்பட எல்லா வருமானங்களும் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கும் முறை பின்பற்றப்பட வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| அ. | 7 நிறைவேற்று குழுக்களிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ள ஏக்கர் வரி வருமதி மீளாய்வாண்டு நிதிச்செயலாற்றுகைக்கூற்றில் வருமானமாகவும் நிதி நிலைமைக்கூற்றில் வருமதியாகவும் காட்டப்பட்டிருக்கவில்லை. | அடுத்து வரும் நிதியாண்டில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி நிலைமைக்கூற்றில் வருமதியாகவும் நிதிச் செயலாற்றுகைக்கூற்றில் வருமானமாகவும் காட்டப்படல் வேண்டும். |
| ஆ. | கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் 10 இன் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டு பக்கத்தில் சொத்துக்களின் மொத்த பெறுமதிகளில் இருந்து திரட்டிய தேய்மானம் கழிக்கப்பட்ட தொகை வருட இறுதியில் தேறிய தொகையாக கொண்டுவர வேண்டிய போதிலும் இதற்கு மாறாக சொத்துக்களின் மொத்த பெறுமதிகளில் இருந்து வருடாந்த தேய்மானம் கழித்த தொகையே இறுதிப் பெறுமதியாக கொண்டுவரப்பட்டுள்ளமையால் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா. 8,952,516 ஆல் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது. | தேறிய தொகையே கணக்குகளின் நிதிநிலைமைக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் மொத்த பெறுமதிகளில் இருந்து திரட்டிய தேய்மானம் கழிக்கப்பட்டு வரும் தேறிய தொகையை கணக்குகளில் காட்டப்படல் வேண்டும். |
| இ. | கமநல சேவைகள் நிலையங்களுக்கு சொந்தமான ரூபா 31,845,000 பெறுமதியான மதிப்பிடப்பட்ட கட்டிடங்கள் மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையங்களுக்கு சொந்தமான கட்டடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ஈ. | 3 நிறைவேற்று குழுக்களில் நான்கு வகையான 89,046 Kg மற்றும் 322 L மானிய உர இருப்பானது மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காது நிலையத்தின் களஞ்சியத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் பெறுமதி மதிப்பிட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட பிரதி ஆணையாளரின் ஆலோசனைக்கமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிலையத்தின் களஞ்சியத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ள மானிய உர இருப்பானது அவற்றின் பெறுமதி மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் கொண்டுவரப்பட வேண்டும். |
| உ. | கிளிநொச்சி நிறைவேற்று குழுவில் ஜப்பான்ஜென் திட்டத்தின் கீழ் கடனடிப்படையில் இரு சில்லு உழவு இயந்திரம் பெற்ற கடனாளிகளின் வருமதி தொகை கூட்டு மொத்தம் ரூபா 4,012,150 ஆனது ஆணையாளர் நாயகம் மற்றும் உதவி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் செலுத்தப்பட வேண்டிய கணக்கில் ரூபா | வேறுபாடுகள் அடுத்து வரும் நிதியாண்டில் சீர்செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | வருமதித் தொகையும் ஆணையாளருக்கு செலுத்த வேண்டிய தொகையும் இணங்கியிருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 3,802,291 ஆக காட்டப்பட்டமையினால் நடைமுறைப்பொறுப்பானது ரூபா 209,858 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | | |
| **ஊ.** | பளை நிறைவேற்று குழுவில் மீளாய்வாண்டில் நிலையத்தின் நிதி நிலைமை கூற்றில் கிடைக்கவேண்டிய கமநல வங்கி பங்கு இலாபமாக ரூபா 104,339 வெளிப்படுத்தப்பட்டுள்ள போதும் கமக்கார வங்கி வருடாந்த கணக்கறிக்கையில் செலுத்த வேண்டிய கமநல வங்கி இலாபமாக ரூபா 234,424 காணப்படுகின்றமையால் கிடைக்க வேண்டிய கமநல வங்கி பங்கு இலாபமானது ரூபா 130,085 ஆல் குறைத்துக்காட்டப்பட்டுள்ளது. | 2025 ஆம் ஆண்டில் இலாப சீராக்கல் கூற்று மூலம் இலாப சீராக்கல் மேற்கொண்டு சீராக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். | கிடைக்க வேண்டிய சரியான பங்குலாபமானது வருடாந்த கணக்கறிக்கையில் காட்டப்பட வேண்டும். |
| **எ.** | அக்கராயன்குளம் நிறைவேற்று குழுவில் மீளாய்வாண்டிற்கான நிதிச்செயலாற்றுகை கூற்றில் கமக்கார அமைப்புகளிடம் இருந்து 04 சில்லு உழவு இயந்திர வருமானமாக ரூபா 210,000 ரூபா 80,000 வருமானமாக காட்டப்பட்டமையினால் செலவிலும் கூடிய வரவானது ரூபா 130,000 குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | அடுத்துவரும் நிதியாண்டில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வருமதிகளை சரியாக காட்டக்கூடிய வகையில் நிதிகூற்றுக்கள் தயாரிக்கப்படவேண்டும். |
| **ஏ.** | பூநகரி நிறைவேற்று குழுவில் மீளாய்வாண்டிற்கான காலபோக நெற் செய்கையிலீடுபட்டிருந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்காத கூட்டுமொத்தம் ரூபா 2,243,830 பெறுமதியான 13.19 மெட்ரிக் தொன் மானிய உர இருப்பானது நிலையத்தின் களஞ்சியத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுகளிலும் காட்டப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | இலவச மானியமாகையால் இதற்கான கிரயம் குறித்த கம்பனியினரிடமிருந்து எமக்கு வழங்கப்படவில்லை இதன்காரணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை எனினும் குறித்த கம்பனியினரிடமிருந்து கிரயம் வழங்கப்படும் பட்சத்தில் கணக்குகளில் காட்டப்படும். | களஞ்சியத்தில் உள்ள உர இருப்பானது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| **ஐ.** | பரந்தன் நிறைவேற்று குழுவின் நிலையத்திற்கு சொந்தமான ரூபா 4,470,000 பெறுமதியான கட்டடம் 2022 ஆம் ஆண்டு கட்டப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கட்டடத்தின் பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருக்காமையினால் நடைமுறையல்லாச்சொத்தானது ரூபா குறைத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | விலை மதிப்பு பெறுவது தொடர்பாக அனுப்பப்பட்டுள்ளதுடன் குறித்த காணி கட்டடம் தொடர்பான பெறுமதிகள் எவையும் கிடைக்கப்பெறவில்லை. | கட்டடத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ஒ. | கண்டாவளை நிறைவேற்று குழுவின் ஆளுநர் நாயகத்திற்கு செலுத்தவேண்டிய மானியப்பசளை விற்பனை வருமானம் ரூபா.958,789 ஆனது வருமானமாக காட்டப்பட்டமையால் மீளாய்வாண்டின் செலவிலும் கூடிய வருமானம் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது. | இது உண்மையில் செலுத்தவேண்டிய பணம் என நிச்சயிக்க முடியவில்லை. | கணக்குகளில் காட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.3 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| அ. | 6 நிறைவேற்று குழுக்களிலும் மீளாய்வாண்டிற்கான நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த 32 வருமதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 10,881,758 தொடர்பில் வருமதிகளுக்கான எழுத்துமூலமான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் நிதியாண்டில் வருமதிகளுக்கு எழுத்துமூலமான உறுதிப்படுதல்களை இணைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | வருமதிக்கான எழுத்து மூலமான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்று சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |
| ஆ. | 6 நிறைவேற்று குழுக்களிலும் மீளாய்வாண்டிற்கான நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த 32 சென்மதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 26,165,595 தொடர்பில் சென்மதிகளுக்கான எழுத்துமூலமான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் நிதியாண்டில் சென்மதிகளுக்க்கு எழுத்து மூலமஉறுதிப்படுதல்களை இணைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | கடன்கொடுனர்களின் பெயர் மற்றும் நிலுவைகள் விபரங்கள் கணக்காய்விற்று சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |
| இ. | 6 நிறைவேற்று குழுக்களிலும் மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் வயற்காணி 22,817 ஹெக்ரெயர் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 5,080,127 ஏக்கர் வரியாக அறவிடப்பட்டிருந்தமையினை உறுதிப்படுத்தக்கூடிய வயற்காணி பதிவேடு கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்காமையினால் அறவிடப்பட்ட ஏக்கர் வரி மற்றும் வருமதி ஏக்கர் வரி ஆகியவற்றினை சான்றுபடுத்த முடியாதிருந்தது. | தற்பொழுது வரைபு வயற்காணி பதிவேடானது தயாரிக்கப்பட்டு இற்றைப்படுத்துவதுடன வரைபு வயற்காணி பதிவேட்டின்படி 2024 ஆம் ஆண்டிற்கு ஏக்கர் வரி பதிவேடும் தயாரிக்கப்பட்டு இற்றைப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | வயற்காணி பதிவேடு கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவேண்டும். |
| ஈ. | 5 நிறைவேற்று குழுக்களிலும் 280 சந்தர்ப்பங்களில் ரூபா 28,455,433 பெறுமதியான காசோலைகள் விநியோகத்தின் போது காசோலை விநியோக பதிவேட்டில் (Cheque issuing register) காசோலையினை பெற்றுக்கொண்டவரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் போன்ற விபரங்கள் சரியான | சில சந்தர்ப்பங்களில் காசோலையினை வைப்பில் இட்டு வைப்புச்சான்றிதளை ஆவனம் செய்யப்படும். ஆகையால் காசோலை விநியோகப்பதிவேட்டில் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட காசோலைகளுக்கு மட்டுமே. கையொப்பம் பெறப்படும். | காசோலை விநியோக பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறையில் குறிப்பிடப்பட்டிருக்காமல் காசோலை வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டிருந்தது. | | |
| **உ.** | கிளிநொச்சி நிறைவேற்று குழு அமைந்துள்ள நிலையத்திற்கு சொந்தமான ரூபா 19.2 மில்லியன் பெறுமதியான கட்டடம் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் அதன் உரிமையை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையம் அமைந்துள்ள காணி கட்டடங்களுக்கு 19.2 மில்லியன் ரூபா மதிப்பீடு 2023 ஆண்டிலிருந்து செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஆவணத்தை பெற்றுக்கொள்வதற்கு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | கட்டடத்தின் உரிமையை உறுதிப்படுத்தகூடிய, ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவேண்டும். |
| **ஊ.** | பூநகரி நிறைவேற்று குழுவில் கமநலசேவை நிலையத்தில் காணப்பட்ட நிரந்தர வைப்பு மீதி ரூபா 977,499 இற்கான மூலச்சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கமநல சேவை நிலையத்தில் காணப்பட்ட நிரந்தர வைப்பு மூலச் சான்றுதலழ் 2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த காலகட்டத்தில் அளிவடைந்ததுள்ளதால் மத்திய வங்கியுடன் தொடர்பு கொண்டு குறித்த சான்றினை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இவ்வாண்டு சமர்ப்பிப்பதற்கான ஒழுங்கு செய்யப்படும் என தயவாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். | நிரந்தர வைப்புச்சான்றிதழ் பெறப்பட்டு கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட வேண்டும். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| **அ.** | **2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டம்** | | | |
| **i.** | பிரிவு 44 (1) | 6 நிறைவேற்று குழுக்களிலும் கமக்காரர் அமைப்புக்கள் ஒவ்வொன்றினதும் கணக்குகள் கமநல ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியால் பரிசீலனை செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள போதும் கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என அறியத்தருகின்றேன். | சட்ட ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| **ii.** | பிரிவு 52 | 10 நிறைவேற்று குழுக்களிலும் கமநல அபிவிருத்தி பிரதேசத்திற்காக விவசாயத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேசத்திற்கான விவசாய திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்ட ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| **iii.** | பிரிவு 55 | 05 நிறைவேற்று குழுக்களிலும் நிர்வாகப் பிரதேசத்திலுள்ள கமத்தொழிற் காணிகளை நில அளவை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கமத்தொழில் காணிநில அளவை செய்யும் வேலைகள் தற்போது இடம் பெற்று வருகிறது. | கமத்தொழில் காணிகளை நில அளவை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **iv.** | பிரிவு 56(ஈ) | 04 நிறைவேற்று குழுக்களிலும் ஏக்கர்வரிப் பதிவேடானது நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை. | ஏக்கர் வரி பதிவேடு தயாரிக்கப்பட்டு இற்றைப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன் | ஏக்கர்வரி பதிவேடானது நாளதுவரை இற்றப்படுத்தப்பட்டு பேணப்பட வேண்டும். |

**ஆ. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| **i.** | நிதி ஒழுங்குவிதிகள் 110(1) | 04 நிறைவேற்று குழுக்களிலும் இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடு கமநல சேவைகள் நிலையத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. | இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடுகள் பேணுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன் | இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட வேண்டும். |
| **ii.** | நிதி ஒழுங்குவிதிகள் 214 | 09 நிறைவேற்று குழுக்களிலும் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடுகள் இனிவரும் காலங்களில் பேணப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். | நி.பி 214 பிரகரம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |
| **iii.** | நிதி ஒழுங்குவிதிகள் 880 மற்றும் 25 யூன் 2020 திகதிய சுற்றுநிருபம் 08/2020 | பளை நிறைவேற்று குழுவில் கமநல வங்கியின் நிதி நடவடிக்கைகளுக்கு பொறுப்பு வாய்ந்த 39 உத்தியோகத்தரினால் ஆறு மாதங்களுக்கு மேலாக பிணைப்பணம் செலுத்தப்ப பட்டிருக்கவில்லை. | பதில் தரப்படவில்லை. | நிதி ஒழுங்குவிதிகள் 880 பிரகாரம் பிணைப்பணம் செலுத்தப்பட வேண்டும். |
| **iv.** | நிதி ஒழுங்குவிதிகள் 891 | 02 கமநல சேவை அமைப்புக்கள் பிணைப்பணப் பதிவேடு பேணவில்லை | பிணைப்பணப் பதிவேடு பேண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்குவிதிகள் 891 பிரகாரம் பிணைப்பணப் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| **v.** | நிதி ஒழுங்குவிதிகள் 1646 | 2 நிறைவேற்று குழுக்களிலும் உழவு இயந்திரங்களுக்கான நாளாந்த வாகன ஓட்டப் பதிவேட்டு மூலப்பிரதி மற்றும் அதன் மாதாந்த செயலாற்றுகைப் பொழிப்புக்கள் நாளதுவரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நான்கு சில்லு உழவியந்திரங்களுக்கான நாளாந்த ஓட்டப் பதிவேடுகள் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | உழவு இயந்திரங்களுக்கான நாளாந்த வாகன ஓட்டப் பதிவேட்டு மூலப்பிரதி மற்றும் அதன் மாதாந்த செயலாற்றுகைப் பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **இ.** | **அரச நிர்வாக சுற்றறிக்கைகள்** | | | |
| **i.** | 19 திசெம்பர் 2016 ஆந் திகதிய சுற்றறிக்கை இலக்கம் 3/2016 | கிளிநொச்சி நிறைவேற்று குழுவிற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பானபரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான பரீட்சிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. | எரிபொருள் நுகர்வு தொடர்பான பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **ஈ.** | **கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் சுற்றுநிருபம்** | | | |
| **i.** | 16.10.1981 ஆம் திகதிய 107 ஆம் இலக்க சுற்றுநிருபம் | 6 நிறைவேற்று குழுக்களிலும் உத்தியோகத்தரிடமிருந்து பிணைப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தரிடம் இருந்து பிணைப்பணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தியோகத்தரிடம் இருந்து பிணைப்பணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான 10 நிறைவேற்றுக் குழுக்களின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா. 4,436,586 தொகை மிகையொன்றாக காணப்படுவதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா. 10,950,317 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதிப் பெறுபேறுகளின் ரூபா 6,513,731 இற்கான குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **அ.** | நடைமுறைச்சொத்து மற்றும் பொறுப்பாக காட்டப்பட்டுள்ள இனங்கணபடபடாத பெறுவனவு மற்றும் கொடுப்பனவு முறையே ரூபா 485,845 மற்றும் ரூபா 181,125 தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை | தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது . | நடைமுறைச்சொத்து மற்றும் பொறுப்பாக காட்டப்பட்டுள்ள இனங்கணபடபடாத பெறுவனவு மற்றும் கொடுப்பனவு தீர்வு காணப்படுதல் வேண்டும். |
| **ஆ** | கிளிநொச்சி நிறைவேற்று குழுவில் மீளாய்வாண்டில் நடைமுறையல்லா பொறுப்பு மற்றும் நடைமுறை பொறுப்பில் காணப்பட்ட இனங்காணப்படாத மீதி கூட்டுமொத்தம் ரூபா 301,740 முறையே ரூபா 216,740 மற்றும் ரூபா 85,000 தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மாவட்டபிரதி ஆணையாளரின் ஆலோசனைக்கமைவாக நடைமுறைப்பொறுப்பில் காணப்படும் மீதிகளை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | விசாரனை செய்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **அ.** | 8 நிறைவேற்று குழுக்களில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் வட மாகாண பிரதம செயலாளரினால் 2011 ஆம் ஆண்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட 93 எண்ணிக்கையான நான்கு சில்லு உழவியந்திரங்கள் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக உரிமைமாற்றம் செய்ய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | தற்பொழுது கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் உரிமைமாற்றம்செய்ய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. | உழவியந்திரங்களை உரிமைமாற்றம் செய்ய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| **ஆ.** | 4 நிறைவேற்று குழுக்களுக்கு சொந்தமான ரூபா 42,215,000 பெறுமதியான கட்டடங்கள் நிலையத்தில் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்ற போதும் அவ் அரச காணியினை உரித்தாக்குவதற்கு கடந்த 32 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கமநல சேவைகள் நிலையம் அமைந்துள்ள காணி கட்டடங்களுக்கு மதிப்பீடு 2023 ஆண்டிலிருந்து செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஆவணத்தை பெற்றுக்கொள்வதற்கு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | அரச காணியினை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **இ.** | 8 நிறைவேற்று குழுக்களில் 77 உழவு இயந்திரங்கள் 15 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாது காணப்படுவதுடன் அவற்றை திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த நான்கு உழவியந்திரங்களையும் திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | உழவு இயந்திரங்களை திருத்திப்பவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **அ.** | 2012 ஆம் ஆண்டில் ஜென் திட்டத்தின் கீழ் கமநல ஆணையாளரினால் வழங்கப்பட்ட இரண்டு சில்லு உழவியந்திர கடன் பணம் ரூபா 181,125 இரு வருமதியாளர்களிடமிருந்து 13 ஆண்டுகளாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இருவருமதியாளர்களிடமிருநதும் கடன் பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கடன் பணம் ரூபா 181,125 இனை இரு வருமதியாளர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **ஆ** | 7 நிறைவேற்று குழுக்களிலும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் தொடர்பில் மாவட்ட பிரதி ஆணையாளரின் | அறவிடப்பட வேண்டியுள்ள மற்றும் கொடுப்பனவு |

| | | |
|---|---|---|
| 7/5/12/11 இலக்க 2022.06.01 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் வேறு வெளி நிறுவனங்களுக்கும் கமநல சேவைகள் நிர்வாகக் குழுவிற்கும் இடையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் 2022.08.25 ஆந் திகதிக்கு முன்னர் தீர்த்துவைக்கப்பட வேண்டியுள்ள போதிலும் 2024.12.31 ஆந் திகதியில் நிலையத்தினால் அறவிடப்பட வேண்டியுள்ள கூட்டுமொத்தம் ரூபா 13,990,671 மற்றும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியுள்ள கூட்டுமொத்தம் ரூபா 2,613,240 தொடர்பில் தீர்த்து வைக்க பெரும்பாக உத்தியோகத்தரால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனைக்கமைவாக மாவட்ட காரியாலயம் ஊடாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | செய்யப்பட வேண்டியவை தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 வருடாந்த செயற்பாட்டுத்திட்டம்**

| கணக்காய்வுஅவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **அ.** 10 நிறைவேற்று குழுக்களினால் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் பந்தி 03 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அடுத்த நிதியான்டில் இருந்து வருடாந்த செயற்பாட்டுத்திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**5. கமநல வங்கி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 10 நிறைவேற்று குழுக்களினால் மீளாய்வாண்டில் 156 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த பயிர்ச்செய்கை கடன் நிலுவை ரூபா 15,157,346 தொடர்பில் அறவீடு செய்ய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் நிலுவைகளை அறவீடு செய்வதற்கு தொடாச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | கடன் நிலுவைகளை அறவிட தவறிய உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கடன் நிலுவைகளை அறவீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |